# செய்தி வெளியீடு

## அண்ணல் காந்தியடிகளின் 151ஆவது பிறந்த நாள் விழா

## மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் பங்கேற்பு

அண்ணல் காந்தியடிகளின் 151ஆவது பிறந்த நாள் விழா 2.10.2019 அன்று தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அண்ணல் காந்தியடிகள் திருவுருவச்சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கவுள்ளனர்.

முன்னதாக, காலை 8 மணியளவில் பள்ளி மாணவ, மாணவிகள், பிரம்மகுமாரிகள் ஈஸ்வரிய விஸ்வ வித்யாலயத்தைச் சார்ந்த  சகோதர சகோதரிகள் கலந்துகொள்ளும் மிதிவண்டிப் பேரணி நடைபெறுகிறது. தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் மிதிவண்டிப் பேரணியை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் துவக்கி வைப்பார்கள். இப்பேரணி அண்ணல் காந்தியடிகள் சிலையில் இருந்து கிண்டி காந்தி மண்டபம் வரை நடைபெறும்.

காலை 8 மணி முதல் 10 மணி வரை காந்தி சிலை அருகில் நூற்புவேள்வி வழிபாடு நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு கிண்டி, காந்தி மண்டபத்தில் நடைபெறும் விழாவில் மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கி விழாப்பேருரையாற்றுவார்கள். இவ்விழாவிற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகிப்பார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் முன்னிலை வகிப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து, தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி, மத நல்லிணக்கம் பற்றி பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

2.10.2019 முதல் 4.10.2019 வரை காந்தி மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக் கண்காட்சியும், இரவு 7 மணிக்கு அண்ணல் காந்தியடிகள் பற்றிய திரைப்படம் திரையிடப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9